## முதல்வர் கவனிப்பாரா....

# பவள விழா கண்ட சுதந்திர இந்தியாவின் உண்மை நிலை.....!

## - தஞ்சை பரிதாபம்!



சோழநாடு சோறுடைத்து, என்பார்கள். அந்த அளவுக்கு செழிப்பாக திகழ்ந்த மாவட்டம் தஞ்சாவூர் .
ஆனால், சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் முடித்து, சுதந்திர இந்தியாவின் பவள விழாவைக் நாம் கொண்டாடிக் கொண்டிருக்கும், இந்த வேளையில் தஞ்சை மாவட்டத்தின் இன்றைய நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது.

அதன் வெளிப்பாடு தான் நாம் பிரசுரித்துள்ள புகைப்படங்கள்.




படங்கள், எடுக்கப்பட்ட இடம், தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தாலுகா, பெத்தாச்சி வயல் கிராமம்.

குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு, பெண் குழந்தைகளின் பாதுகாப்பு என்று அரசும், அரசியல்வாதிகளும் ஒரு புறம் முழங்கிக் கொண்டிருக்கிறார்கள். பெருமை படவேண்டியதுதான்.

அதே நேரத்தில் இந்த உண்மை நிலையினையும் பாருங்கள் மிகவும் பரிதாபத்திற்குரியது.
படத்தைப் பார்த்தாலே உங்களுக்குத் தெரிய வந்திருக்கும்.
விவசாயக் கூலிகளாக குழந்தைகள் !
உடுத்துவதற்குக் கூட துணியில்லாத குழந்தைகள்!
அதிலும் வயதுக்கு வரும் பருவத்தில் உள்ள பரிதாபமான பெண் குழந்தைகள் !
என்ன கொடுமை இது?

தஞ்சை மாவட்ட அதிரடியான கலெக்டரும் , அரசின் சமூக நலத்துறையும் அதிரடி காண்பார்களா? நமது முதல்வரின் கவனத்திற்கு சென்றால் துயரப்படுவது மட்டுமல்ல எனது ஆட்சியில் இந் நிலையா என பதறிவிடுவாரே.....

முதல்வருக்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள் அரசு அதிகாரிகள்? இந்த கொடுமைக்கு அய்யகோ......?

நாம் கோரிக்கையாக வைப்பது ஒன்றே, ஒன்று தான் .அந்த குழந்தைகளுக்கு அடிப்படை வசதிகளான உண்ண உணவு, உடுக்க உடை , முதலில் கிடைக்கச் செய்யுங்கள்.

பின்னர் , எப்பொழுதும் நீங்கள் விளம்பரப்படுத்தும் "அனைவருக்கும் கல்வி " என்பதை நிஜமாக்குங்கள்.

பாவம்! அந்த குழந்தைகளின் வாழ்வில் ஒளியேற்றுங்கள் .

செவி சாய்க்குமா அரசு? கலெக்டரும், சமூக நலத்துறை அமைச்சரும் ஸ்பாட்டில் துயர் துடைப்பார்களா?


நெல்லை கோபால்
மூத்த பத்திரிகையாளர்
27.08.2022/9994478389